[27th November 1970

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : இந்தப் புகார் சம்பந்தமாக சென்னையிலிருந்து டெபுடி டைரக்டர் அவர்களை அனுப்பி நான் விசாரணை செய்ததில், ஏற்கெனவே குற்றம் சாட்டப்பட்டதைப் போன்று தாக்குதல் எதுவும் நடக்கவில்லை என்று தெரியவந்தது. ஆனால் ஏற்கெனவே இராதாகிருஷ்ணன் என்ற கிளார்க்குக்கும் இந்த மேனேஜருக்கும் தகராறு இருந்தது. அங்கே சுமுகமான சூழ்நிலை இருக்க வேண்டும் என்று அந்த இரண்டு பேருமே அங்கே வேலை செய்ய வேண்டாம் என்று இருவரும் அங்கேயிருந்து மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சில பணியாளர்கள் அந்த மேலாளர் மீது கம்பிளேண்ட் கொடுத்தது உண்மை. ஆனால் டைரெக்டர் விசாரணையின் பிறகு, அடித்ததாகச் சொல்லப்படுவது தவறு என்று தெரியவந்தது. பணியாளர்கள் மட்டுமின்றி அந்த மேலாளரும் அங்கேயிருந்து மாற்றப்பட்டிருக்கிறார்.

*Crocodile Farm*

*10. *Q.*—THIRU G. SWAMINATHAN, THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether there is any proposal for the setting up of a Crocodile farm in Killukudi village near Srirangam ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) the details of the scheme ?

**முதலைப் பண்ணை**

திரு. ஜி. சுவாமிநாதன், திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஸ்ரீரங்கம் அருகில் கில்லக்குடி கிராமத்தில் முதலைப் பண்ணை ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அத்திட்டத்தின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) யும் (உ)வும் : முதலைகள், அவற்றின் தோல்களுக்காக அநியாயமாகக் கொல்லப்படுவதினின்றும் காப்பதற்காக, ரூபாய் 13 ஆயிரம் செலவில், திருச்சி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் தீவில், கொள்ளிடத்தின் பக்கம் இருக்கும் கிளிக்கூடு என்னும் கிராமத்திலுள்ள குளத்தில் முதலைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த அரசு சமீபத்தில் ஒப்புதல் வழங்கியிருக்கிறது. இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் செலவுத் தொகையில், ஆராய்ச்சி வேலைகள், குளத்திற்கு அபிவிருத்திகள் செய்தல், குளத்தில் முதலைகளை வளர்ப்பதற்கு சொந்தக்காரர்களுக்கு உதவித் தொகை அளித்தல், முதலைகளுக்கு உணவு, பண்ணை வேலை ஆட்கள் மூவரின் சம்பளம், முதலிய இனங்கள் அடங்கும். இத்திட்டம் முதலில் ஓர் ஆண்டு செயல்படுத்தப்படும்.

27th November 1970]

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 'முதலைகள் கொல்லப்படாமல் தடுக்கவேண்டிய ஏற்பாடுகள்' என்று குறிப்பிட்டார். முதலைகள் கொல்லப்படாமல் இருப்பதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் எனக்கு வந்த பதிலில் ''முதலைகள் கொல்லப்படாமல் தடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக'' என்று இருப்பதால் அவ்வாறு தமிழகத்தில் முதலைகள் கொல்லப்படாமல் இருக்க ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன். அப்படி முதலைகளைக் கொல்லாமல் இருக்க ஏற்பாடுகள் செய்யப்படும்போது முதலைகளை வளர்க்க வேண்டிய அவசியம் என்ன வந்தது ? அதுவும் கிளிக்குடியில் போய் முதலைகளை வளர்ப்பதற்கு என்ன அவசியம் வந்தது ? அந்தத் திட்டம் வேறு எங்காவது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : இந்திய அரசினிடமிருந்து ''ஒவ்வொரு மாநிலத்திலும் முதலைகள் பெருவாரியாகக் கொல்லப்படுகின்றன. அவைகள் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்'' என்று ஒரு பரிந்துரை வந்தது. அதன்படி முதலைகளைக் கொல்லாமல் இருக்க வன இலாக்கா சட்டத்தைத் திருத்தி அமைக்கும்படி ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றிச் சட்ட இலாக்காவினர் பரிசீலனை செய்து வருகிறார்கள். அதற்கு முன்னால் இப்போதே கூட வெளிநாடுகளுக்கு முதலைத் தோலை ஏற்றுமதி செய்வதையும் தடைப்படுத்தியிருக்கிறார்கள். அதுவுமன்றி, முதலைத் தோலை உத்தரவில்லாமல் வைத்திருந்தால், அப்படி வைத்திருப்பவர்களைத் தண்டிக்கலாமா என்றுகூட சட்ட ஆலோசனை நடைபெற்று வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : முதலைகள் கொல்லப்படாமல் தவிர்க்க வேண்டியது மத்திய அரசிற்கேயன்றி மாநில அரசுக்கும் உள்ள பொறுப்பாகும். இப்போது முதலைகளைக் கொல்லாமல் இருப்பதற்கான சட்டம் இருக்கவேண்டும். அவ்வாறு முதலைகள் கொல்லப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக முதலைகளை வளர்க்கும் பண்ணை எதற்கு ? அந்த இடத்தில் முதலைப் பண்ணை வைப்பது போல் வேறு பல இடங்களிலும் வைக்கும் உத்தேசம் இருக்கிறதா? அதற்காகச் செலவிடப்படும் பணம் எதற்கு உபயோகமாகும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : வனவிலங்குகள், பறவைகள் இவைகளுக்காகப் பராமரிப்பு நிலையங்கள் வைத்திருக்கிறோம். புலி சரணாலயம், மிருகங்கள் சரணாலயம், பறவைகள் சரணாலயம் என்றெல்லாம் வைத்திருக்கிறோம். இப்போது முதலைகளைக் கொல்லாமல் தடுக்க வேண்டும். முதலைகள் அதிகமாக இல்லை. எனவே அவைகளை ஒரே இடத்தில் வைக்க வேண்டும் என்று திட்டம் இருக்கிறது. இருக்கிற இடங்களிலும் முதலைகளைக் கொல்லக் கூடாது என்று தடை செய்யும் சட்டத்தை மத்திய அரசு மாநில அரசுகளுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. அதை நாம் இங்கே ஆலோசனை செய்து வருகிறோம். வன இலாக்காவினர் இது குறித்து ஆலோசனை செய்து வருகிறார்கள்.

THIRU G. VASANTHA PAI: Sir, on a point of order, how is the Electricity Minister concerned with crocodiles ? (*Laughter*)

AN HON. MEMBER : He is the Minister for Forests also.

[27th November 1970

THIRU G. VASANTHA PAI : It is put here as Electricity Minister.

THIRU A. R. DAMODARAN : As a member of the Wild Life Protection Board, I agree that crocodiles have to be preserved. But, may I know from the Hon. Minister whether it would not be proper to select a more suitable place for the purpose like Mudumalai Game Sanctuary instead of a place near Srirangam where there are already a lot of human crocodiles ? (*Laughter*)

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : நமது மாநிலத்தில் முதலைகள் எந்த மாவட்டத்தில் அதிகமாக இருக்கின்றன ? எந்த மாவட்டத்தில் முதலைகள் இல்லாமல் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : ஆள் விழுங்கி முதலைகள் இப்போது நாட்டில் சற்று குறைவு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பறவைகள் சரணாலயம் பற்றிக் குறிப்பிட்டதால், அதுபற்றி நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். அந்தச் சரணாலயம் ஒன்றிற்குக் கிட்டத்தட்ட 15 நாட்களுக்கு முன்னால்தான் நான் சென்றிருந்தேன். அப்போது அங்கே இருக்கும் பறவைகளைப் பார்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் தூரதிருஷ்டிக் கண்ணாடிபற்றி கேட்டபோது, கடந்த 6 மாத காலமாக அது வேலை செய்யவில்லை என்று சொன்னார்கள், அங்கே இருக்கிற பணியாளர்கள். நான் என்னுடைய தூரதிருஷ்டிக் கண்ணாடியை எடுத்துக்கொண்டு போகாத காரணத்தால், அங்கே பறவைகளைச் சரியாகப் பார்க்க முடியாத நிலைமை ஏற்பட்டது. அது மட்டுமின்றி, அந்தச் சரணாலயம் செல்வோருக்கு என்று ஒரு விடுதி வைத்திருக்கிறார்கள். மாலைநேரங்களில் அங்கே செல்வோருக்கு காப்பி சிற்றுண்டி முதலியவை கிடைக்க வேண்டும் என்பதற்காக. ஆனால் நான் அங்கே சென்றபோது ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இதையும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இது குறித்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : அங்கே இருக்கிற விடுதிக்கு முதலிலேயே எழுதி இன்னின்னது வேண்டும் என்று சொன்னால்தான், அவ்வாறு கேட்டுக் கொள்பவர்களுக்கு மட்டும் வசதி செய்து தருகிறார்கள். பறவைகளைப் பார்ப்பதற்காக இருக்கும் தூரதிருஷ்டிக் கண்ணாடி செயல்படாமல் இருப்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கண்ணாடியில் பார்க்காமல், பறவைகளின் அருகாமையில் சென்றால் கூட, அந்தப் பறவைகள் பறக்காமல் இருப்பதைக் காணலாம். அந்த தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கான இயந்திரம் வெளிநாட்டிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. இப்போது புதிதாக ஒன்று வாங்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். அதற்காகச் சற்று பெரிதாகக் காட்டுகிற தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்று வாங்க இருக்கிறோம். அது கிடைக்காத சூழ்நிலைதான் தற்போதைய சிரமத்திற்குக் காரணம்.

DEPUTY CHAIRMAN : Questions are over.

[*Note*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]